**செய்தி வெளியீடு எண்:009** **நாள்: 06.01.2020**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (6.1.2020) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறை சார்பில் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி நகரில் 9 கோடியே 87 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டடப்பட்டுள்ள சைனிக் இளநிலை மாணவர்கள் விடுதிக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 86 கோடியே 7 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 42 பள்ளிக் கட்டடங்கள், 3 ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனக் கட்டடங்கள் மற்றும் ஒரு ஆசிரியர் இல்லக் கட்டடத்தையும் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தமிழகத்திலுள்ள அனைத்து மாணவ மாணவியரும் கல்வியில் சிறந்து விளங்கிடவும், சமுதாயத்தில் உயர்ந்த நிலையை எய்திடவும், கட்டணமில்லா கல்வி, விலையில்லா பேருந்து பயண அட்டைகள், மிதி வண்டிகள், சீருடைகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மடிக்கணினிகள், கல்வி உபகரணப் பொருட்கள், காலணிகள், இடைநிற்றலைக் குறைக்க ஊக்கத் தொகை வழங்குதல், பள்ளிகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திடும் வகையில் புதிய வகுப்பறைகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி நகரில் அமைந்துள்ள சைனிக் பள்ளி வளாகத்தில் 52,924 சதுர அடி பரப்பளவில் 9 கோடியே 87 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 288 மாணவர்கள் தங்கும் வசதியுடன் கட்டப்பட்டுள்ள சைனிக் இளநிலை மாணவர்கள் விடுதிக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், நபார்டு கடனுதவி திட்டத்தின் கீழ் தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், பெரம்பலூர், இராமநாதபுரம், நீலகிரி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருப்பூர், திருவாரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 31 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில்

60 கோடியே 66 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், கழிப்பறை மற்றும் சுற்றுச்சுவர்;

ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ் கடலூர், திண்டுக்கல், மதுரை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், திருவள்ளூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 11 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 15 கோடியே 20 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள்;

மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கீழ் திருவாரூர் மாவட்டம் – கொரடாச்சேரி, பெரம்பலூர் மாவட்டம் – வேப்பூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம் – பிரம்மதேசம் ஆகிய இடங்களில் ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனத்திற்கு 7 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம் – கவுண்டம்பாளையத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆசிரியர் இல்லக் கட்டடம்;

என மொத்தம் 95 கோடியே 94 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சைனிக் இளநிலை மாணவர்கள் விடுதிக் கட்டடம், 42 பள்ளிக் கட்டடங்கள், 3 ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனக் கட்டடங்கள் மற்றும் ஆசிரியர் இல்லக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் காலியாக உள்ள 18 நூலகர் மற்றும் தகவல் உதவியாளர் நிலை–II பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான 43 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளையும், பொது நூலகத் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான ஒரு பணியாளரின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில்

அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணையையும் வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 9 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திருமதி பா. வளர்மதி, தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் மாநில திட்ட இயக்குநர், திரு. இரா.சுடலைக்கண்ணன், இ.ஆ.ப., பள்ளிக் கல்வி ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர் மற்றும் பொது நூலகத் துறை இயக்குநர் (கூடுதல் பொறுப்பு) திரு.பெ.குப்புசாமி மற்றும் மாநில கல்வியியல், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் திருமதி உமா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**